## இலங்கை முதலீட்டுச் சபை - 2018

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை முதலீட்டுச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை முதலீட்டுச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| இணங்காதுள்ள குறித்த நியமத்திற்கான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **LKAS 01** – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:- கணக்கீட்டுக் கொள்கை, பிற்போட்ட வருமானத் துடன் தொடர்பு டைய தன்மை | தன்மை மற்றும் பருமண் காரணமாக திரண்ட நிதியத்திலிருந்து நேரடியாக கழிக்கப்பட்ட பாரிய | நிதிக்கூற்றுக்களை புரிந்து கொள்வதற்காக பயன்படுத் திய முக்கியமான கணக் |

| | | |
|---|---|---|
| மற்றும் நிலைமைகள் மற்றும் திரண்ட நிதியத்திலிருந்து நேரடி யாக கழிக்கப்பட்ட பாரிய செயற்திட்டங்களின் உட்கட்ட மைப்பு வசதிகளிற்காக செய்யப் பட்ட செலவினம் என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் மீதான செலவினம், புறம்பாக வெளிப்படுத்துவதற்கான நிச்சயித்தல் காரணி ஒன்றாக பொருண்மையாக காணப்படவில்லை. இருப்பினும், பிற்போட்ட வருமானத் துடன் தொடர்புடைய தன்மை மற்றும் நிலைமைகள் 2019 இல் கணக்கீட் டுக் கொள்கைகளின் கீழ் வெளிப்ப டுத்தப்படும். | கீட் டுக் கொள்கைகளும் ஏனைய கணக்கீட்டுக் கொள்கைகளும் அவை பயன்படுத்துவோரின் பொரு ளாதார தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தாத போதிலும் வெளிப்படுத்தப் படுதல் வேண்டும். |
| **(அ) LKAS 08** – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப் பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்:- 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பட்டியலிடப் பட்டு 2018 இல் இரத்துச் செய்யப்பட்டிருந்த ரூபா 8,964,714 மைதான வாடகை வருமானம் முன்னைய ஆண்டிற்குச் சீராக் காது நடப்பாண்டிற்கு சாட்டப்பட் டிருந்தது. | இரத்துச் செய்யப்பட்ட பட்டியல்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் நம்பகத் தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்து வதில்லை. | பொருண்மையான முன் னைய காலத்திற்கான வழு க்கள் அவற்றின் தேறலின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுக் களில் உரியவாறு திருத்த ப்படுதல் வேண்டும். |
| **(இ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்: -** சபை நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப் பட்ட ஆண்டில் அவற்றிற்கு பெறுமானத்தேய்வு செய்யாது கைத விர்ப்புச் செய்யப்பட்ட ஆண்டடிற்கு ஒரு முழுவருட பெறுமானத் தேய்வை செய்திருந்தது. அதற்க மைய, மீளாய்வாண்டிற்கான பெறு மானத்தேய்வு ரூபா 10,998,848 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத் துக் காட்டப்பட்டிருந்தது. | நிலையான சொத்து தொகுதியினை இலகுபடுத்துவதற்கும் ஐஎம்எஎஸ் உடன் இணங்குவதற்கும் சொத் தொன்றின் பெறுமானத்தேய்விடக் கூடிய தொகை அதன் ஆயுட்காலம் முழுவதற்கும் முறையான அடிப்படை யொன்றில் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், LKAS 16 இன் அடிப்படையில் சபை தற்போதைய பெறுமானத்தேய்வுக் கொள்கையினை இணைத்துக் கொண்டுள்ளது. | சொத்தொன்றைப் பயன் படுத்து வதற்கு கிடைக்கக் கூடிய காலம் தொடக்கம் பெறுமானத் தேய்விடக் கூடிய வகையில் பெறுமான த்தேய்வுக் கொள்கை வடி வமைக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் அச்சொத்து கைத விர்க்கப்படுகையில் பெறுமானத் தேய்விடல் உடனடியாக நிறுத்தப்ப டுதல் வேண்டும். |
| **(ஈ) LKAS 40 – முதலீட்டு ஆதனம்** | | |
| • நிர்வாக நோக்கத்திற்காக பயன்ப டுத்தப்படுகின்ற மிரிஜ்ஜவலை யிலுள்ள ரூபா 18,343,000 பெறுமதியுடைய காணி முதலீட்டு ஆதனம் என இனங்காணப்பட் டுள்ளது. | இது 2019 ஆம் நிதியாண்டில் திருத்தப்படும். | நிர்வாக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற காணி முதலீட்டு ஆதனம் என இனங்காணப்படக் கூடாது. |
| • முதலீட்டு ஆதனத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கட்டிடங் களிற்காக பயன்படுத்திய பெறுமா னத்தேய்வு முறை மற்றும் பயன்தரு ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்விடல் வீதம் ஆகி யவற்றை சபை வெளிப்படுத்தி யிருக்கவில்லை | எதிர்காலத்தில் இது புறம்பாக வெளிப்படுத்தப்படும். | முதலீட்டு ஆதனத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கட்டி டங்களிற்காக பயன் படுத்திய பெறுமானத்தேய்வு முறை மற்றும் பயன்தரு ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்விடல் வீதம் ஆகியவற்றை வெளி ப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 209,600,000 ஆனதோர் தொகை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளாது பெறவேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால், ஏனைய பெறவேண்டிய மீதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | குறைச் செயலாற்றல் தொழில் முயற்சிகள் அல்லது பயன்படுத்தப்படாத சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கையேற்கப்பட்ட ரூபா 209,600,000 பெறுமதியுடைய முன்னைய மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குரிய வளவுகள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டதுடன் முதலீட்டுச் சபைக்கு இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டுமென நடுவர் தீர்ப்பினால் நிச்சயிக்கப்பட்டது. ஆகையால், மேற்படி கொடுக்கல் வாங்கலிற்கு சட்டரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக குறித்த பெறுமதி ஏனைய பெறவேண்டியதாக காட்டப்பட்டுள்ளது. | பொருண்மை எண்ணக்கருவின் படி, பெறவேண்டியவை அவை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) குறித்த காலப்பகுதியைக் கருத்திற்கொள்ளாது ஆண்டு முழுவதற்கும் காலக்கழிவு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பிற்போட்ட செலவின காலக்கழிவு ரூபா 1,390,616 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிரு ந்தது. | சொத்தின் மதிப்பிடப்பட்ட ஆயுள் முழுவதற்கும் நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் காலக்கழிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | காலக்கழிவானது தொடர்புடைய காலத்தினைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றின் படி | தொடர்புடைய பதிவேட்டின் படி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| மூலதன முடிவுறா வேலையிலிருந்து மாற்றிய மூலதனமாக்கப்பட்ட தொகை | 18,404,140 | 0 | 18,404,140 | பதலிளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகை குறித்த பதிவேடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் கிடைக்காமை.

| விபரம் | தோகை | கிடைக்கப் பெறாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) பிற்போட்ட செலவினத்தின் காலக்கழிவு | | | | |
| - சபை அலுவலகத்தை புதிய இடத்தில் அமைத்தல் | 6,169,237 | 2016 சனவரி 01 இற்கு முன்னரான மீதிக்குரிய உறுதிப்படுத்தல் | இந்த விடயம் 2015 யூலை 14 இல் இடம் பெற்ற பொது முயற்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. 2015 முதல் பிற்போட்ட செலவினத்திற்காக பதிவேடொன்றைப் பேணுவதற்கு இணங்கப்பட்டது. | மீதிக்கான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| - பிற்போட்ட வலய அபிவிருத்திச் செலவினம் | 37,500,264 | 2016 சனவரி 01 இற்கு முன்னரான மீதிக்குரிய உறுதிப்படுத்தல் | | |
| (ஆ) மூலதன முடிவுறா வேலை | 19,029,730 | நாட்குறிப்புப் பதிவுகளை ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் | தொடர்புடைய நாட்குறிப்புப் பதிவுகளை ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. | தொடர்புடைய மூல ஆவணங்களின் மூலம் நாட்குறிப்புப் பதிவுகள் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** 1978 இன் 04 ஆம் இலக்க முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் 13 (2) (ஆ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை மாத்திரம் பெற்று அதன் பதவியணியினருக்கு சபை ரூபா 529,975,394 மொத்தத் தொகையான 7 படிகளைச் செலுத்தியிருந்தது. | 1978 இன் 04 ஆம் இலக்க முதலீட்டுச் சபை அதிகாரச் சட்டத்தின் 13 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மேற்படி படிகளிற்கு/ கொடுப்பனவுகளிற்கு கௌரவ அமைச்சரிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வரிசை அமைச்சின் அமைச்சரது அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் கோரப்பட்ட அங்கீகாரம் வழங்கப்படாத போதிலும், பூச்சிய வட்டி வீதத்தினைக் கொண்ட மூன்று கடன் வகைகளும் 4.2 சதவீதத்தினைக் கொண்ட ஆறு கடன் வகைகளும் 2007 முதல் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் அமுல்படுத்தப் பட்டு வருவதுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியிணர் கடன் மீதிகள் ரூபா 793,170,825 ஆகக் காணப்பட்டது. | சபையின் மனித வளக் கொள்கை கையேட்டிற்கான அங்கீகாரம் 2014.03.10 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்திடம் கோரப்பட் டுள்ளது. | பொது முயற்சிகள் திணைக் களத்திடமிருந்து பதவியணி யினர் கடன் திட்டத்திற்காக அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |
| (இ) வீடமைப்பு நோக்கத்திற்காக சபையின் ஊழியர் ஒருவர் அரசாங்க அல்லது தனியார் வங்கி ஒன்றிடமிருந்து அல்லது கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனொன்று உள்ளபடியான வட்டி வீதத்திற்கும் 4.2 சதவீத வட்டி வீத்தற்கும் இடையிலான வேறுபாட்டினை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் 20.5 சதவீத உச்ச வரம்பிற்கு உட்பட்டு வழங்கப்படுகின்றது. மீளாய்வாண் டின் போது மேற்படி கடன் திட்டத்தின் கீழ் ரூபா 42,165,668 தொகை பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படாது மீளளிக்கப்ப ட்டிருந்தது. | சபையின் மனித வளக் கொள்கை கையேட்டிற்கான அங்கீகாரம் 2014.03.10 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்திடம் கோரப்பட் டுள்ளது. | பொது முயற்சிகள் திணைக் களத்திடமிருந்து பதவியணி யினர் கடன் திட்டத்திற்காக அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |
| (ஈ) சபைத் தலைவர் / பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டில் மல்வத்த ஏற்றுமதி வலயத்திலுள்ள 41 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணியில் நீதி அமைச்சினால் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த துடன் தொடர்புடைய அதிகாரத் தரப்பிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்று க்கொள்ளாது குறித்த காணியினை கையேற்பதற்கான அங்கீகாரம் 2018 ஆம் ஆண்டில் நீதி அமைச்சிற்கு பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்டி ருந்தது. | 2018.03.23 ஆந் திகதி இடம்பெற்ற முதலீட்டுச் சபை யின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இக்காணியை கையேற்பதற்கான அங்கீகா ரம் நீதி அமைச்சிற்கு வழங்கப்பட்டதுடன் தற்போது நீதி அமைச்சு கையேற்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள் ளது. | காணியினை வேறொரு தரப்பிற்கு கையளிப்பதற்கு முன்னர் உரிய தரப்பினரி டமிருந்து அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |

## 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அங்கீகரித்த தொழில் முயற்சி களிலிருந்து நிலுவையாக காணப்ப ட்ட தொகை ரூபா 639,266,361 ஆனதுடன் அதில் ரூபா 319,963,217 அல்லது 50 சதவீதமானவை இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப் படாதுள்ளது. | 2012 வரை நிலுவையாக உள்ள தொகையினை பதவழிப்புச் செய் வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேவை யான விபரங்கள் வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2013 முதல் திரண்டுள்ள நிலுவைகளை ஆய்ந்தறிவதற்கு நிறைவேற்றுப் பணிப்பாளர் (அறவீடுகள்) நியமிக்க ப்பட்டுள்ளார். | நிலுவையாக உள்ள மீதிகள் இனிமேலும் தாமதிக்காது அறவி டப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வருடாந்தக் கட்டணம் ரூபா 278,701,582 ஆனது டன் அதில் ரூபா 172,007,591 அல்லது 62 சதவீதமானவை நான்கு ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப் படாதுள்ளது. | - மேற்படி – | நிலுவையாக உள்ள மீதிகள் இனிமேலும் தாமதிக்காது அறவி டப்படுதல் வேண்டும். |
| (இ) தொழில் முயற்சிகளிலிருந்து நிலுவையாகவுள்ள தொகை மீதான நட்டக்கடன் ஏற்பாடு மீளாய்வாண் டின் இறுதியில் மொத்த நிலுவைத் தொகை யில் 58 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 372,722,869 தொகையான மொத்த நட்ட க்கடன் ஏற்பாட்டில் ரூபா 300,506,035 அல்லது 80 சதவீதமானவை இரத்துச் செய்யப்ப ட்ட, மூடிவிடப்பட்ட மற்றும் செயற் பாடுகள் நிறுத்தப்பட்ட தொழில் முயற்சிகளிலிருந்து நிலுவையான தொகையினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. | - மேற்படி – | அறவிட முடியாதவை என இனங்காணப்பட்ட தொகைகள் தொடர்பில் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவத ற்கு சட்டரீதியான நடவ டிக்கைகளோ அல்லது நிதிப் பிரமாணங்களின் பிரகாரமான நடவடிக் கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) வருடாந்த தவணைக் கட்டண த்திற்கான மொத்த நட்டக்கடன் ஏற்பாட்டில் ரூபா 225,471,376 அல்லது 91 சதவீதமானவை 700 இரத்துச் செய்யப்பட்ட, 67 மூடிவிட ப்பட்ட மற்றும் 38 செயற்பாடுகள் நிறுத்தப்பட்ட தொழில் முயற்சி களிலிருந்து நிலுவையான தொகை யினை பிரதிநிதித்துவம் செய்கின் றது. | - மேற்படி - | அறவிட முடியாதவை என இனங்காணப்பட்ட தொகைகள் தொடர்பில் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவத ற்கு சட்டரீதியான நடவ டிக்கைகளோ அல்லது நிதிப் பிரமாணங்களின் பிரகாரமான நடவடிக் கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (உ) வதுபிடிவல வீடமைப்புத் திட்டத்தின் ஏலமிடலாளரான தனியார் கம்பனி யொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,604,200 ஆனதோர் தொகை எட்டு ஆண்டுகளிற்கும் மேலாக அறவிட ப்படாதுள்ளதுடன் இது தொடர்பில் சபைக்கும் ஏலமிடலாளருக்கும் இடையே உடன்படிக்கையொன்று காணப்படமையினை உறுதிப்படுத்து வதற்கான எவ்வித சான்றும் கிடைக்கப்பெறவில்லை. | சட்டமா அதிபரின் கருத்துப் படி, சட்டரீதியான நடவடிக்கை எடுப்ப தற்கான காலம் தற்போது முடிவடைந்துள்ளது எனக் குறிப்பி டப்பட்டுள்ளமையால் சபை சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கு மாயின் அது வெற்றியளிக்கப் போவதுமில்லை. இருப்பினும், பொலி ஸாரிடமிருந்து அல்லது வற்புறுத்தல் கடிதமென்றின் ஊடாக இந்நிலுவை உறுதிப்படுத் தப்படுமாயின் சட்டரீதி யான நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. | சட்டமா அதிபரின் கரு த்துப் படி, உரிய வேளையில் நடவடிக் கை எடுக்கப்பட்டிருத் தல் வேண்டும். |
| (ஊ) அரசாங்க நிறுவனங்களிடமி ருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 37,680,103 தொகை 4 ஆண்டு களிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக் கவில்லை. | ஜீஈடீபீ இன் ஆதனம் செயற் திட்டம் ஒன்றிற்காக சபைக்கு விடுவிக்கப்படு கையில் ஜீஈடீபீ இடமிருந்து பெறவேண்டியவை அதற்கு எதிராக எதிரீடு செய்யப்படும். ஏனைய நிலுவைகளைத் தீர்க்குமாறு சபை கடன்பட்டோருக்கு கடிதங்களை அனுப்பியிருந்த போதிலும் அவர்கள் அதற்குப் பதிலளித்திருக்கவில்லை. | நிலுவையான மீதிகளை அறவிடுவதற்கு காத்தி ரமான நடவடிக்கை கள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.7.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 5,798,464 தொகையான சில்லறைக் கடன்கொடுத்தோர் 3 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு குறித்துக்கொள்ளப் பட்டது. | கடன்கொடுத்தோர் அத ற்குரிய காலத்தில் தீர்க் கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 49,524,019 தொகையான பிடி காசில் 26 ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய ரூபா 5,005,395 ஆனதோர் தொகை மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | சில பிடி காசுகள் வருமானமாக எடுக்கப்பட்டதுடன் இன்னும் சில பிடி காசுகள் கொடுப்பனவிற்காக அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வுள்ளன. | விடுவிக்கப்பட முடியு மான தொகைகளை விடுவிப்பதற்கும் ஏனை யவற்றை வருமானத் திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) முற்பணமாகப் பெறப்பட்டிருந்த ரூபா 234,050,995 மொத்தமான தொகை யில் ரூபா 63,746,513 ஆனதோர் தொகை மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்ததுடன் காணியொன்றை கையேற்பதற்காக தனியார் கம்பனி யொன்றிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 60,782,681 தொகை இத்தொகையில் உள்ளட ங்கியுள்ளது. | வெஸ்டேர்ன் ஒடோமொபைல் (தனியார்) கம்பனியுடனான உடன் படிக்கை இது வரை பூரணப்படுத் தப்படவில்லை. ஆகையால், பெறப் பட்ட தொகை முற்பணப் பெறுவன வுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | உடன்படிக்கையினை பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடி க்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | திறைசேரியின் ஒத்திசைவி னைப் பெற்றுக் கொண்ட பின்னர் உரிய அமைச்ச ரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 14,406,337,500 தொகை யினை சபை முதலீடு செய்திருந்தது. | 02/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற் றறிக்கையின் பிரகாரம் அபிவிருத்தி உபாயங் கள் மற்றும் சர்வதேச வியாபார கௌரவ அமைச்சரின் அங்கீகா ரம் பெற்றுக்கொள்ளப் பட்டது. | நிதி அமைச்சரின் ஒத்தி சைவினைப் பெற்றுக்கொண்ட பின்னர் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள் ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் 104(3) மற்றும் 104(4) | 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 11 வாகன விபத்துக்களுடன் சம்பந் தப்பட்ட ஆரம்ப அறிக் கைகள் அல்லது 10 வாகன விபத்துக்களுடன் சம்பந்தப்பட்ட பூரண அறி க்கைகள் 2018 திசெம்பர் 31 வரை சபையால் சமர்ப்பிக்கப்படவில்லை. | வாகன விபத்துக்கள் பாரிய விபத்துக்கள் அல்ல என்பதுடன் அவை ஏனைய சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்ப ட்டிருந்தன. சாத்தியமான அனைத்து நிலமைக ளிலும் சபை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட் டது. | முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு 7 நாட்களிற்கு முன்னர் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இழப்பு இடம்பெற்று 3 மாதத்திற்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| (இ) 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய பீஈடீ 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் | சபையின் 25 உத்தியோகத் தர்களிற்கு மீளாய்வா ண்டின் போது ரூபா 5,145,435 தொகை சாரதிப் படியாக சபையால் | வாகனங்கள் ஒதுக்கப் பட்ட உத்தியோகத்தர் களிற்கு சாரதி ஒருவரை வேலைக்கு அமர்த்துவத னைக் காட்டிலும் நிதி | உத்தியோகத்தர்களிற்கு சாரதி ஒருவரோ அல்லது சாரதி ஒருவருக்கான படியோ வழங்கப்படக் கூடாது |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | செலுத் தப்பட்டிருந்தது. | மற்றும் நிர்வாக கிரய ரீதியில் இது சபைக்கு அனுகூலமாகக் காணப் பட்டமையால் இக்கொடு ப்பனவு பரிந்துரைக்கப் பட்டது. | |
| (இ) 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடீ 03/2018 ஆம் இல க்க பொது முயற்சி கள் சுற்றறிக்கை | சபை அதன் நிரந்த ஊழியர் ஒருவருக்கு ரூபா 50,000 அல்லது மாதாந் தச் சம்பளம் ஆகியவற் றில் எது கூடியதோ அதனையும் அமைய அல்லது ஒப்பந்த அடிப்ப டையிலுள்ள ஊழியர் ஒருவருக்கு ரூபா 50,000 இனையும் மேற்படி சுற்ற றிக்கைக்கு முரணாக வரு டாந்த உபகாரச் சம்பளமா கச் செலுத்தியிருந்தது. 2018 ஆம் ஆண்டில் இவ்வாறு உபகாரப் படியாக ரூபா 66,216,152 செலுத்தப்பட்டிருந்தது. | நிரந்த ஊழியர் ஒருவரு க்கு ரூபா 50,000 அல் லது மாதாந்தச் சம்பளம் ஆகியவற்றில் எது கூடி யதோ அதனையும் அமைய அல்லது ஒப்ப ந்த அடிப்படையிலுள்ள ஊழியர் ஒருவருக்கு ரூபா 50,000 இனையும் 2018 இற்கான உபகார ச்சம்பளமாகச் செலுத்து வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங் கியிருந்தது. | சபை சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமே உபகாரச் சம்பளத்தை செலுத்துதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகளின் விளைவு ரூபா 759,093,091 மிகையொன்றாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மிகை ரூபா 756,424,050 ஆகக் காணப்பட்டது. ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,669,041 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவினத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 182,612,458 அதிகரிப்பிற்கு எதிராக வருமானம் மற்றும் நிதி வருமானம் என்பன முறையே ரூபா 177,751,776 மற்றும் ரூபா 7,529,723 ஆல் அதிகரித்திருந்தமையே இதற்குக் காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கட்டுநாயக்க ஏற்றுமதி பதணிடல் வலயம் வலயத்திலுள்ள தின்மக் கழிவுகளை அகற்றுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 12,426,186 தொகையினை செலவிட்டிருந்ததுடன் ரூபா 4,259,323 தொகை மாத்திரமே தொழில் முயற்சிகளிற்காக சாட்டப்பட்டிருந்தது. ஆகையால் வலயத்திலுள்ள தின்மக் கழிவுகளை அகற்றுவது தொடர்பில் ரூபா 8,166,863 நட்டம் 2018 ஆம் ஆண்டில் வலயத்திற்கு ஏற்பட்டிருந்தது. | கழிவுகளை புதைப்பதற்காக பயன் படுத்திய காணி பாதுகாக்கப்பட்டதுடன் அதன் காரணமாக ஏறத்தாழ 12 ஏக்கர் காணி ஏனைய புதிய முதலீட்டுச் செயற்திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான புதிய முறையினை அமுல்படுத்துதல், சிக்கனமாகவும் சுற்றாடலுக்கு பங்கமேற்படாத விதத்திலும் நில வளத்தினை பாதுகாக்கும் விதத்திலும் KEPZ இல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான நட்டம் குறைக்கப்பட்டு காணிகளை முதலீட்டுச் செயற்திட்டங்களிற்காகப் பயன் படுத்துதல் அதிகரிக்கப் படுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மிரிஜ்ஜவல ஏற்றுமதிப் பதணிடல் வலயத்தில் ரூபா 630,340,562 கிரயத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த நுழைவு வீதிகள் சேதமடைந்து போக்குவரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. ரூபா 516,964,285 தொகை சபையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சபை வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடவில்லை என்பதுடன் வரிசை அமைச்சின் நெறிப்படுத்தலின் பிரகாரம் தேசிய கட்டிட ஆய்வுகள் நிறுவனத்தினால் உரிய ஆய்வினை மேற்கொண்ட பின்னர் தீர்மானமொன்றை எடுக்கும் வரை மீதிக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிப் பதற்கு முன்னர் ஒப்பந்த காரருடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். |
| (ஆ) உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாது சீதாவக்க, கொக்கல மற்றும் கடுநாயக்க ஏற்றுமதிப் பதணிடல் வலயத்திலும் கண்டி கைத்தொழில் பேட்டையிலுமுள்ள 48,868 சதுர அடிகள் விஸ்தீரணமடைய 57 வளவுகள் ரூபா 18,660,234 வருடாந்த வாடகைக்கு வெளித்தரப்பினர்களிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | உடன்படிக்கைகளைத் தயார்படுத்தல் இறுதிக்கட்டத்தில் உள்ளன. | கால தாமதமின்றி உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

2018 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் சென்முன்னேற்றங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை (புதிய செயற்திட்டங்கள் மற்றும் காலநீடிப்புச் செய்யப்பட்டவை) | வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை (புதிய உடன் படிக்கைகள் மற்றும் கால நீடிப்புச் செய்ய ப்பட்டவை) | இடைநிறுத்தப்பட்ட, மூடப்பட்ட அல்லது உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | இடை நிறுத்தப் பட்டவை | மூடப்பட்டவை | உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டவை |
| 2018 | 94 | 66 | 10 | 23 | 156 |
| 2017 | 103 | 82 | 4 | 6 | 152 |
| 2016 | 186 | 83 | 3 | 6 | 79 |
| 2015 | 157 | 100 | 2 | 12 | 23 |
| 2014 | 160 | 101 | 0 | 11 | 56 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| • உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 2016 – 2018 காலப்பகுதியில் தொடர்ச்சியாக குறைவடைந்துள்ளது. | கவர்ச்சிகரமான ஊக்கிவிப்புக்கள் இன்மை காரணமாக 2016 ஆம் ஆண்டின் பின்னர் புதிய முதலீட்டுப் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்வதில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகின்றது. | உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும் செயற்திட்டங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டங்கள் தொடர்பில் 2014 முதல் 2018 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க குறைவொன்று அவதானிக்கப்படுகின்றது. | வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்வேறுபட்ட அனுமதிகளை செயற்திட்டங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதனாலும் சபையால் கட்டுப்படுத்த முடியாத பல கார | ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்து அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முதலீட்டாளர்களிற்கு உதவுவதற்காக சபை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| • உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை, மீளாய்வாண்டில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தருந்த செயற்திட்டங்களைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டன. | ணங்களாலும் வர்த் தகச் செயற்பாடு களை ஆரம்பித்தல் தாமதமடைந்துள்ளது 2014 இல் உள்நா ட்டு இறைவரிச் சட்டத்தினால் வரி விடுமுறைகள் இடை நிறுத்தப்பட்டு வெட் டுத் திகதிகள் அறி முப்படுத்தப்பட்டமை காரணமாக செயற் திட்டங்களை தொட ங்குதல் தொடர்பில் முதலீட்டாளர் மத்தி யில் அதிருப்தி நில வியது. அதன் விளை வாக, தொடர்ந்து வந்த ஆண்டுகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல் தாமத மடைந்தன. | வேண்டும். |
| | முதலீடுகள் தேறாது ள்ள மற்றும் நீண்ட காலமாக வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம் பிக்கப்படாதுள்ள செயற்திட்டங்களின் உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப் பட்டன. அநேகமான செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டு களில் இடைநிறுத்த ப்பட்டு/மூடப்பட்டதுடன் அதன் தொடர்ச்சியாக 2018 இலும் உடன்ப டிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டன. | உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்ப டுவதனைக் குறைப் பதற்கும் செயற்திட் டங்கள் ஆரம்பிக்கப் படுவதனை அதிகரிப் பதற்கும் சபை நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய 259/09 ஆம் இலக்க சபை விஞ்ஞாபனத் திலுள்ள ஏற்பாடுகளின் படி முதலீட் டாளர் ஒருவரால் செலவிடப்பட்டிருந்த ரூபா 26,100,000 காணி அபிவிருத்திக் கிரயத்தை சபை மீளளித்திருந்தது. இருப்பினும், காணியை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் முதலீட்டாள ருக்கும் சபைக்குமிடையே முறையான | வேலையினைப் பூரணப்படுத்திய பின்னர் முதலீட்டாளரினால் சமர்ப் பிக்கப்பட்ட அளவுப் பட்டியல் (BOQ) மற்றும் தொடர்புடைய ஆவணங்களை நுணுக்கமாக பரிசீலித்த பின்னர் சபை அங்கீகாரத்துடன் காணி அபிவிரு த்திக் கிரயம் மீளளிக்கப்பட்டது. ஆகையால் இது தொடர்பில் | அபிவிருத்தி நியமங்கள் மற்றும் கொடுப்பனவு நிபந்த னைகள் குறிப்பிடப்பட்டு முதலீட்டாளரால் காணி அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்தல் தொடர்பில் சபைக்கும் முதலீட்டாளருக் கும் இடையே உடன்படிக் கையொன்று கைச்சாத்திடப் |

| | | |
|---|---|---|
| உடன் படிக்கை எதுவும் காணப்படாததுடன் காணியை அபிவிருத்தி செய்த பின்னர் முதலீட்டாளரின் கோரிக்கையின் மீது செலவினம் மீளளிக்கப்பட்டிருந்து. | சபைக்கும் முதலீட்டாளருக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. அத்துடன் நிர்மாண உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்படவில்லை. | படுதல் வேண்டும். |

### 3.5 பயன்படுத்தாத மற்றும் விளைவற்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 4 ஆண்டுகளிற்கும் மேலாக வெளித் தரப்பினர் ஒருவர் அத்துமீறிக் குடியிருந்துவருகின்ற வதுபிடிவலை ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள 39.2 பேர்ச் விஸ்தீரணக் காணியில் அமைந்துள்ள ரூபா 6,500,000 பெறுமதியான 1738 சதுர அடி கொண்ட கட்டிடம் பத்து ஆண்டுகளிற்கும் மேலாக விளைவற்றுக் காணப்படுகின்றது. இருப்பினும், சபைக்கு வருமானம் தரும் வகையில் இந்த ஆதனத்தை பயன்படுத்துவதற்கு அல்லது அத்துமீறிய குடியிருப்பாளரை அகற்றுவதற்கு சபை எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | உயர்மட்ட அதிகாரத்திரப்பிற்கு குறித்த குடியிருப்பாளர் மேற்கொண்ட முறைப்பாடு மற்றும் அவரது பிரதிநிதித்துவம் காரணமாக இந்த விடயம் தாமதமடைந்துள்ளதுடன் சபையின் தீர்மானத்தின் படி அரசாங்க காணிகள் (பெறுமதி அறவிடுதல்) சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் குடியிருப்பாளரை அகற்றுவதற்கு முதலீட்டுச்சபை தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கும். | அத்து மீறிய குடியிருப்பாளரை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய முறையில் ஆதனம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.6 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.1 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளின் கொள்வனவுச் செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படாததுடன் 4.2.1(உ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் குறித்த பிரதான கொள்வனவுத் திட்டம் ஆறு மாதங்களிற்கு மேற்படாது அவ்வ ப்போது நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களுடன் பிரதான கொள்வனவுத் திட்டம் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) ஒன்பது ஏற்றுமதி பதணிடல் வலயங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் பூரணப்படுத்துவதற்கு திட்ட மிடப்பட்டிருந்த ரூபா 559.29 மில்லியன் பெறுமதியான 43 கொள்வனவுச் செயற்பாடுகள் மீளாய் வாண்டில் பூரணப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பல்வேறு காரணங்களால் தாமதம் ஏற்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிட்ட கொள்வனவுச் செயற்பாடுகள் பட்டியல் படுத்தப்பட்டவாறு பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) சபையின் உள்ளபடியான மனித வளத் தேவையினைக் கருத்திற் கொள்ளாது ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் பணிப்பாளர் சபைத் தீர்மானத் திற்கமைய ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்ட மையால் 66 முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அற்றோர் மற்றும் 106 முதலாந்தர – திறனற்ற ஊழியர்கள் அங்கீகரித்த பதவியணியில் மிகையாகக் காணப் பட்டனர். | இந்த ஊழியர்கள் சபையின் அத்தியாவசிய நாளாந்த செயற்பாடு களில் ஈடுபடுத்துவதற்காக ஆட்சேர்க் கப்பட்டனர். | ஊழியர்கள் ஆட்சேர்க் கப்படுகையில் சபையின் உள்ளபடியான மனித வளத் தேவை கருத்திற் கொள்ளப்படுதல் வேண் டும். |
| (ii) 1997 ஒக்தோபர் 24 ஆந் திகதி 124 ஆம் இலக்க நிதிச் சுற்றறி க்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஊழியர்கள் 06 மாதங்கள் முதல் 56 மாதங்கள் வரை பதிற்கடமை பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். | பதிற்கடமை பதவிகளை நிரப்பு வதற்கு காலக்கிரமத்தில் நடவடி க்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற் பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (iii) உரிய அங்கீகாரம் பெறப்படாது சபையின் 03 ஊழியர்கள் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவுகளிற்கு முரணாக 2018 ஆம் ஆண்டில் அவர்கள் தொடர்பில் ரூபா 3,913,277 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | ஒரு ஊழியர் சபையின் சேவைக்காக மீள அழைக்கப் பட்டதுடன் ஏனைய இரண்டு ஊழியர்களும் 2018.12.31 வரை சபைக்கு விடுவிக்கப்பட வில்லை. | அமைச்சரவையின் அங்கீ காரமின்றி எந்தவொரு ஊழியரும் அமைச்சிற்கோ அல்லது வேறு நிறுவன ங்களிற்கோ விடுவிக்கப் படக் கூடாது என்பதுடன் அவ்வாறு விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்கு சபை குறித்த காலப் பகுதிக்காக எந்தவொரு வேதனத்தை யும் செலுத்தக் கூடாது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இற்கான சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிறை வேற்றுவதற்காக திட்டமிடப்பட்டு ரூபா 1,757.49 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த 118 செயற் பாடுகள் பட்டியலிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சில செயற்பாடுகள் உரிய திகதியில் நிறைவேற்றப்பட்டதுடன் பல்வேறு காரணங்களால் ஏனையவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | மீளாய்வாண்டில் நிறைவேற்றுவ தற்கு திட்டமிடப்பட்ட செயற்பா டுகள் அவ்வாண்டிலேயே நிறைவே ற்றப்படுதல் வேண்டும். |

### 4.2 சுற்றாடல் விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டுநாயக்க, சீதாவக்க மற்றும் வதுபிடிவல ஏற்றுமதி பதணிடல் வலயங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPL) பெறப்ப டாதுசெயற்பட்டு வருவதுடன் கட்டு நாயக்க ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள நான்கு தொழில் முயற்சிகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நியமங்களிற்கு அமைவுறாமையால் சுற்றாடல் பாது காப்பு அனுமதிப் பத்திரத்தைப் (EPL) பெற்றுக் கொள்ளாது செயற் பட்டுவருகின்றன. | குறுகிய காலத்தில் வலயங்க ளிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை சபை மேற் கொண்டு வருகின்றது. சுத்திகரிக் கப்பட்ட கழிவுநீர் நியமங்க ளுடன் இனங்காமை காரணமாக தொழில் முயற்சிகளிற்கு அனும திப்பத்திரங்களை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. | காலதாமதமின்றி வலயங்களிற் காக சுற்றாடல் அனுமதிப்பத்திர ங்களை பெற்றுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன் சுற்றாடல் நியமங்களுடன் இனங்கியொழுகி காலதாமதமின்றி சுற்றாடல் அனும திப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தொழில் முயற்சி கள் தூண்டப்படுதல் வேண்டும். |